அதற்கு நான் பதில் சொல்லவேண்டுமென்ருல் 20 நிமிடங்கள் 30 நிமிடங்கள் வரை கூட ஆகும், நான் படிக்கவேண்டும் ஒவ்வொன்ருக. அதனுல் தான் முன் ஏற்பாடு ஆக அவற்றை யெல்லாம் எல்லாருக்கும் கொடுத்துவிட்டு அந்த அடிப்படையிலே விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும், இன்ருே நாளேயோ அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே தக்க முடிவுகளே எடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : கேள்வி நேரத்திலே கேள்வி என்று வந்ததற்குப் பிறகு கேள்வியே கேட்கக்கூடாது என்பது சரியல்ல, அதற்காக நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி கேள்வி வந்ததற்குப் பிறகு சந்தர்ப்பம் கொடுக்காமல் இருப்பது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வியே அனுமதிக்கப் படவில்லே என்று சொல்வது சரியல்ல. துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படவில்லே என்று கூறுவது சரியல்ல. துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் முடிக்கப்பட்டதே தவிர துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படவில்லே என்று சொல்வது சரியல்ல.

Special coaching scheme in Law College

*627 Q.—THIRU N. K. PALANISWAMY
THIRU R. R. MUNUSWAMY — Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that a new scheme of special coaching has been started in the Law College, Madras, recently; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இளநிலே பொதுச்சட்ட முதல், இரண்டாம் ஆண்டுத் தேர்வுகளில் (I and II B.G.L. Examinations) தேர்ச்சி பெருத மாணவர்களுக்காகச் சிறப்பு வகுப்புகள் நடத்தும் திட்டம் இந்த ஆண்டிலிருந்து (1973-74) சட்டக் கல்லூரியில் தொடங்கப்பட்டிருக் கிறது. மேற்கண்ட திட்டத்தின்படி கல்லூரி நடக்கும் எல்லா நாட்களிலும் காலே 7 மணியிலிருந்து 9 மணிவரை சிறப்பு

1974 மார்ச் 27]

வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சிறப்பு வகுப்புகளுக்கு வரும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் சிறப்புக் கட்டணமாக ரூ. 20 வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த லேபர் சட்டங்கள் பற்றி டிப்ளமா கோர்ஸ் பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுமா ? தமிழிலே அங்கு படிப்பு சொல்லிக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எம்.எல். படிக்கின்றவர்களுக்கு சிறப்பான சலுகைகள் அளிக்கப்படுமா ? என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார்கள் ? ஒரு சில சப்ஜெக்டுகளுக்குதான் எம்.எல். இருக்கிறது, எல்லா பாடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல் ஆண்டிலே தேர்வு பெறாதவர்கள் இரண்டாம் ஆண்டிலே சேர்ந்திருக்கிறார்கள், முதல் ஆண்டு படிப்பை முடிக்காமல் மூன்றாவது ஆண்டுக்குச் செல்ல முடியாது. அப்படிப் பட்டவர்கள் 70 சதவீதத்தினர் இருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டிலே தேர்வு பெறாமல் மூன்றாம் ஆண்டுத் தேர்வுக்குச் செல்ல முடியாது. அப்படிப்பட்டவர்கள் 60 சதவீதத்தினர் இருக்கிறார்கள். பி.ஜி.எல். இரண்டு ஆண்டுகளில் இப்படிப்பட்ட முறை பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது, அது நல்லமுறையில் நடந்தால் எம்.எல்.க்கும் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டால் பரிசீலிக்கலாம்.

முதியோர் கல்வி.

*628 வினா—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதியோர் கல்வி கற்பிப்பதின் மூலம் 1971–72 மற்றும் 1972–73 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு முதியோர், கல்வி அறிவு பெற்றார்கள் ?